# அம்பலாங்கொடை பிரதேச சபை

## காலி மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்டம்பர் 02 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அம்பலாங்கொடை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையினால் கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சபைக்கு நன்கொடை ஒன்றாகக் கிடைத்திருந்த ரூபா 8,500,000 பெறுமதியான இலக்கம் WP LL-7074 கொண்ட டிபர் வண்டி மற்றும் மீளாய்வாண்டின் போது சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 306,200 பெறுமதியான வாயுக்குளிரூட்டி இயந்திரம் நிதிக் கூற்றுக்களில் மூலதனப்படுத்தியிருக்காமையினால் மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் கணக்கு ரூபா 8,500,000 இனாலும், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணக் கணக்கு ரூபா 306,200 இனால் மற்றும் மூலதன செலவீட்டுக்கான அரசிறை உதவுத் தொகை கணக்கு ரூபா 8,806,200 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது இலக்கம் PF-3407 கொண்ட சபையின் கப் வண்டிக்கு பொருத்தப்பட்ட துணைக் கருவிகளுக்கான செலவு ரூபா 313,000 இனை நிதிக் கூற்றுக்களின் மூலதனச் செலவுகள் எனக் காட்டப்படாமல் மீண்டுவரும் செலவுகள் எனக் காட்டப்பட்டிருந்தமையால் மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் கணக்கின் மீதி மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகைக் கணக்கு ரூபா 313,000 வீதம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்வரும் வருடத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 212,412 இற்கான செலவுகள் மீளாய்வாண்டிற்கான செலவுகள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகள் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 206,758 இற்கான மீண்டுவரும் செலவுகள் மூலதனச் செலவுகள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது ரூபா 2,000,000 செலவிடப்பட்டு 59 தார் பீப்பாக்கள் மற்றும் டயர்கள் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி இருப்புக்களின் பெறுமதியினை கணித்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது சபையினால் சங்கங்களுக்கு தார் விநியோகித்தல் தொடர்பாக பெறவேண்டிய ரூபா 3,350,071 தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாமையால் அதே தொகையால் கடன்பட்டோர் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்ற உள்ளூராட்சி ஊழியர்களுக்காக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட வேண்டியிருந்த ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ரூபா 3,658,873 தொகை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த மீளாய்வாண்டு ஜனவரி 29 திகதி கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 59,000 பெறுமதியான 10 கெஸட் இயந்திரங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டிற்கான நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 2,331,625 தொகை எனினும், ஆண்டிற்கான வருமானம் என ரூபா 2,604,000 உம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 272,375 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஒ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 40 நிர்மாண வேலைகள் தொடர்பாக கிடைக்க வேண்டிய மூலதன உதவி ரூபா 26,743,772 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 54,931,333 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 28,187,561 இனால் கடன்பட்டோர் மற்றும் மூலதன வருமானம் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஓ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 32 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய தொகை ரூபா 24,764,130 எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 33,719,583 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 8,955,453 இனால் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதன செலவுகள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஔ) மீளாய்வாண்டிற்கான மீடியாகொட வாராந்த சந்தை சிட்டை இடப்பட்டவை ரூபா 242,500 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 409,410 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் கிடைக்க வேண்டிய வாடகை மற்றும் கடன்பட்டோர் ரூபா 166,910 தொகை வீதம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தன.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேட்டு மீதிகளிடையே ரூபா 746,065 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஆ) கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் ஏக்கர் வரி மீதி ரூபா 174,739 வும், வாடகை மீதி ரூபா 449,573 உம் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் மீதி ரூபா 49,650 தொகை எனினும், உப அலுவலகத்தின் துணைப் பதிவேடுகள் சமப்படுத்தியிருக்காமையால் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகள் துணைப் பதிவேட்டு மீதிகளுடன் இணக்கஞ் செய்ய முடியாதுள்ளது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 211,282,570 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள் நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள், கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள், கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பட்டோலைகள் போன்ற சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-----------------------

2.1 நிதி விளைவு

-----------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 1,379,205 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,660,949 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

2.2.1 வீத வரி

--------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) மற்றும் (2) பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீதிகள் முறைமை வசதிகள், மின்சார வசதிகள், தொலைபேசி வசதிகள், நீர் வசதிகள் மற்றும் பிரதேச சபையினால் குப்பை கூளங்களை அகற்றுதல் ஆகிய மேற்கொள்ளப்படும் வசதிகள் காணப்படும் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என கணிக்கக் கூடிய படபொல நகரம் போன்ற பகுதிகள் காணப்பட்ட போதும் அப் பகுதிகளை இனங்கண்டு வீத வரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 ஏக்கர் வரி

---------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 174,739 இற்கான ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 வாடகை

--------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 449,573 இற்கான ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 அனுமதிப் பத்திரக் கட்டணம்

---------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 49,650 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 3,140,260 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 13,341,606 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 அதிகாரம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------

பிரதேச சபை நிதியம் ஈடுபடுத்தல் பற்றிய சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 இல் காட்டப்பட்டுள்ள விடயங்களின் கீழ் அடங்காத கருமம் ஒன்றான இரண்டு வெளிநாட்டு கல்விச் சுற்றுலாக்களுக்காக தலைவர் மற்றும் 08 அங்கத்தவர்கள் கலந்து கொள்வதற்காக ரூபா 1,938,160 தொகை பிரதேச சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அதே போல் அவ் வெளிநாட்டு பிரயாணத்திற்காக முறையான அங்கீகாரம் ஒன்றும் பெற்றிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

1988 இன் 74 இலக்க சட்டத்தினால் திருத்தப்பட் 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படும் சட்டத்தின் தேவைக்கு ஏற்ப 2014 ஆண்டின் போது சபையின் உப தலைவர் மற்றும் 09 அங்கத்தவர்கள் 2014 ஆண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளியிடும் கூற்று 2015 ஜனவரி 26 திகதி வரை சமர்ப்பித்திருக்கவில்லை.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------------

(அ) வீதி விளக்குகள் உபகரணங்கள் கொள்வனவு செய்தல்

--------------------------------------------------------------------------------------

2014 ஆண்டின் போது வீதி விளக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்தவதற்காக ரூபா 1,305,044 தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன், வீதி விளக்குகள் பராமரிப்புக்காக ரூபா 1,440,512 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வீதி விளக்குகள் தொடர்பாக அறிவுரைகளில் காட்டப்பட்டுள்ள நீர்பாசன மற்றும் மின் சக்தி அமைச்சின் 1998 மார்ச் 16 ஆந் திகதிய இலக்கம் பீ.எப்./12/91 கொண்டு சுற்று நிருபத்தின் பிரகாரம் வீதி விளக்குகள் புதிதாக பொருத்துவதற்கு முன்னர் அதற்கான அங்கீகாரத்தை மின் சக்தி மற்றும் வலுச் சக்தி அமைச்சரிடம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன.

(ii) 2012 ஆண்டிற்கான இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை கையொப்பமிட்டிருந்த போதிலும் படிகள் ஏதும் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(iii) 2013 மற்றும் 2014 ஆண்டுகளுக்காக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கைகள் கையொப்பமிட்டிருக்கவில்லை.

(ஆ) காணி ஏல விற்பனை

------------------------------------

2015 ஜனவரி 21 திகதி கலகொடபெத்த காணி, குருந்துவத்தை காணி மற்றும் ரத்மஹர வத்த ஆகிய காணியின் ஏல விற்பனை பற்றி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது பொது வேலைகளுக்காக சபைக்கு கிடைத்திருந்த காணித் துண்டுகள் பொருத்தமற்ற காணித் துண்டுகள் என அவதானிக்கப்பட்டதுடன் அக் காணித் துண்டுகளுக்கான காணி உறுதிகள் சபைக்கு வழங்கியிருக்கவில்லை. அதே போல் காணிகளின் பாதைகள் கொங்கிரீட் போடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மின்சாரமும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

3.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

------------------------------------------------------

2013 ஜூன் 05 திகதிய இலக்கம் : PCMD/PR/2013 கொண்ட ஜனாதிபதி செயலாளரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத அழிவடையும் நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித் தொகுதியும் 3 மாத காலப் பகுதியில் அகற்றுவதற்கான செயற்பாடு ஒன்றினை தயாரிக்கும் படி அறிவித்திருந்த போதிலும் சபை வளவில் 02 கைடிரக்டர் வண்டிகள் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது என 2015 ஜனவரி 24 திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---------------------------------------------

உள்ளுராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் 2014 நவம்பர் மாத்தில் 512 எண்ணிக்கை 1" கல்வணய்ஸ் குழாய்கள் சபைக்கு கிடைத்திருந்தன. 2015 ஏப்ரல் 01 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது சபையில் 393 கல்வணய்ஸ் குழாய்கள் மாத்திரம் காணப்பட்டன என அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் சபைக்கு வழங்கியிருந்த 1" கல்வணய்ஸ் குழாய்கள் 119 பற்றாக்குறையாக காணப்பட்டது. குழாய் பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 131,733 ஆகும்.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

--------------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

பாதீட்டின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான சில வருமான விடயங்களிடையே முரண்கள் காணப்பட்டதுடன் சில செலவு விடயங்களில் செலவுகள் மிகையாக மேற்கொள்ளப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்